**செய்தி வெளியீடு எண்: 702** **நாள்: 01.10.2018**

## செய்தி வெளியீடு

20வது கால்நடை கணக்கெடுப்புப் பணி இன்று மத்திய அரசின் உத்தரவுப்படி தமிழகமெங்கும் துவங்கியது.

கால்நடை பராமரிப்புத்துறை, தொடர் வளர்ச்சி குறித்த இலக்குகளை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் பொது சபை ஏற்றுக் கொண்ட, ஏழ்மை ஒழிப்பு, பசியின்மை, நல்ல உடல்நிலை மற்றும் சுகாதாரம், பாலின சமத்துவம், மற்றும் காலநிலை செயல்பாடு ஆகிய தொடர் வளர்ச்சி இலக்குகளை, பல்வேறு திட்டங்களையும் கொள்கைகளையும் அமல்படுத்துவதன்வாயிலாக நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளது. கால்நடை கணக்கெடுப்பானது கால்நடை வளர்ப்போருக்கான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். பல்வேறு நலத்திட்டங்கள், வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நோக்கிலான திட்டங்கள், கால்நடைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே தீட்டப்படுகின்றன. எனவே, கிராமப்புற ஏழைகளின் பொருளாதார மேம்பாடு என்ற கண்ணோட்டத்தில் கால்நடைகளை கணக்கெடுப்பது அத்தியாவசியமானது ஆகும்.

கணக்கெடுப்பு மத்திய அரசால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. முதலாவது கால்நடை கணக்கெடுப்பு 1919ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அப்போதிலிருந்து 19வது கால்நடை கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. 19வது கால்நடை கணக்கெடுப்பு 2012ல் நடத்தப்பட்டது. 19வது கால்நடை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 2.27 கோடி கால்நடைகளும், 11.74 கோடி கோழினங்களும் உள்ளன.

20வது கால்நடை கணக்கெடுப்பு, 01.10.2018 முதல் 31.12.2018 வரை 90 நாட்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படுகிறது. வீட்டுக்கு வீடு சென்று கணக்கெடுப்பை மேற்கொள்ளும் பணி டேப்ளட் கம்ப்யூட்டர்கள் என்று அழைக்கப்படும் கையடக்க கணினி கொண்டு தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையால் நியமனம் செய்யப்பட்ட கால்நடை மருத்துவ பின்புலம் கொண்ட நபர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. இப்பணிக்காக, 3,887 கணக்கெடுப்பாளர்களும், 795 மேற்பார்வையாளர்களும், மற்றும் 130 கூர்ந்தாய்வு அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த

அனைத்து அலுவலர்களுக்கும் கால்நடை கணக்கெடுப்பை நேர்த்தியாக நடத்துவதற்கு ஏதுவாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

முந்தைய கால்நடை கணக்கெடுப்புகளுக்கு படிவங்களைக் கொண்டு கையினால் விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அந்தப் படிவங்களில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு கணினியில் அட்டவணையிடப்பட்டு அதற்குப் பிறகு தொடர் நடவடிக்கைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டன. அந்த நடைமுறையில் விவரங்களைச் சேகரித்து அவற்றை டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றுவது கடினமான பணியாக இருந்ததுடன், அதிக காலத்தை எடுத்துக் கொண்டு, பிழைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு அளிப்பதாகவும் இருந்தது. இந்த இடையூறுகளைக் களைந்து தரவுவுளை எளிதாக ஒருங்கிணைப்பதற்காக, தற்போதைய கணக்கெடுப்புக்காக கையடக்கக் கணினிகளுக்கு இணைய இணைப்பும், சக்தி காப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

கணக்கெடுப்பாளர்களால் எடுக்கப்படும் புள்ளி விவரங்கள் மேற்பார்வையாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு உடனுக்குடன் தேசிய தகவல் மைய சர்வரில் நேரடியாக பதிவேற்றம் செய்யப்படும். அனைத்து பணிகளும் ஆன்லைன் முறையில் செய்யப்படுவதால் புள்ளி விவரத் தொகுப்பு, இறுதி விவரங்களை கணக்கிடுதல், புள்ளி விவரங்களை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளை வழக்கமான முறையில் படிவங்களைக் கொண்டு கையினால் சேகரிக்கப்படும் நடைமுறையைக் காட்டிலும் விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்ய முடியும்.

இந்தத் திட்டத்தில் விவசாயிகளின் பங்களிப்பை உறுதி செய்வதற்காகவும், இயன்றவரை தரவுகளை துல்லியமாக வழங்குவதற்காகவும், விரிவான தகவல் கல்வி மற்றும் தொடர்பு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து கால்நடை கணக்கெடுப்புப் பணிகளையும் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் அனைத்து நிலைகளிலும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன.

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு.அ. ஞானசேகரன், இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், தண்டல்கழனி வருவாய் கிராமத்தில் 20வது கால்நடை கணக்கெடுப்புப் பணியின் துவக்க விழாவை தலைமையேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும், மரு.கு. குபேந்திரன், கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் (பொ) அவர்கள் வரவேற்றார். டாக்டர்.கே. கோபால், இ.ஆ.ப., அரசு

முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அவர்கள் துறைசார் திட்ட விளக்கவுரையை வழங்கி, கால்நடை கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை விளக்கினார். திரு.மதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு. ஊரகத் தொழில் துறை அமைச்சர் பா. பென்ஜமின் அவர்கள் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமைத் தொடங்கி வைத்து சிறந்த கிடேரிக் கன்றுகளுக்கு பரிசு வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார். மாண்புமிகு. தமிழ் ஆட்சி மொழி, கலை பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க. பாண்டியராஜன், அவர்கள் கால்நடைகளுக்குத் தாது உப்புக் கலவை வழங்கி வாழ்த்துரை வழங்கினார். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலை.கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் 20வது கால்நடை கணக்கெடுப்பைப் துவங்கி வைத்து, கால்நடை கணக்கெடுப்பாளர்களுக்கு டேப்ளட் கணினிகளை வழங்கினார். கால்நடை பராமரிப்பின் அவசியம் கருதி தமிழக அரசு நிறைவேற்றி வரும் பல்வேறு திட்டங்களைப் பற்றி விளக்கினார். மரு. வேணுகோபால், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், திருமிகு. வி. அலேக்ஸாண்டர், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். மரு.தே. கோபு, அம்பத்தூர், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**